**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE,**
**KANNIYAKUMARI AT NAGERCOIL.**

C.O.S. No. 17/2022

**Deposition of the witness:** P.W. **1**

Solemnly affirmed by Thiru/Tmt Bench Clerk in accordance with the provision of Act X of 1873.

| | | |
|---|---|---|
| Name | : | திருமதி. மெர்சி |
| Father's Name | : | மெர்லின் |
| Village | : | கன்னியாகுமரி |
| Taluk | : | அகஸ்தீஸ்வரம் |
| Calling | : | வழக்கறிஞர் |
| Age | : | 36 |
| Date | : | 27.07.2026 |

**முதல் விசாரணை:-**

நான் இந்த வழக்கின் வாதி. என் சத்திய பிரமாண வாக்குமூலத்தை ஏற்கனவே தாக்கல் செய்துள்ளேன். இத்துடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டுகிறேன். நான் இந்த வழக்கு தாக்கல் செய்யும்போது என் கணவர் பெயரை அசோக் என்று சொல்லியிருந்தேன். தற்போது அவரை நான் விவாகரத்து செய்து விட்டேன். புதிய ஆதார் அடையாள அட்டை பெற்று நகலை தாக்கல் செய்கிறேன். வாதியின் ஆதார் அடையாள அட்டை நகல் (அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது) வா.சா.ஆ. 1 ஆகவும், வாதியின் உத்யோக ஆதார் அடையாள அட்டை கணினி நகல் வா.சா.ஆ. 2 ஆகவும், 12.04.2017 முதல் 05.04.2019 வரையிலான கிரேஸ் கன்சல்டன்சியின் கணக்கு விவரப் பட்டியல் அசல் வா.சா.ஆ. 3 ஆகவும், 04.04.2018

முதல் 18.10.2019 வரையிலான வாதியின் சேமிப்புக் கணக்கு விவரப் பட்டியல் அசல் வா.சா.ஆ. 4 ஆகவும், 21.05.2019 ஆம் தேதியிட்ட 1 ஆம் பிரதிவாதியால் வழங்கப்பட்ட பண ரசீது அசல் வா.சா.ஆ. 5 ஆகவும், 27.05.2019 ஆம் தேதியிட்ட 3 ஆம் பிரதிவாதியால் வழங்கப்பட்ட பண ரசீது அசல் வா.சா.ஆ. 6 ஆகவும், 27.05.2019 ஆம் தேதியிட்ட 4 ஆம் பிரதிவாதியால் வழங்கப்பட்ட பண ரசீது அசல் வா.சா.ஆ. 7 ஆகவும், ஜெகோவா நிசி கன்சல்டன்சியின் உத்யோக ஆதார் அடையாள அட்டை கணினி நகல் வா.சா.ஆ. 8 ஆகவும், ஏ.இசட்.எஸ். கன்சல்டன்சியின் உத்யோக ஆதார் அடையாள அட்டை கணினி நகல் வா.சா.ஆ. 9 ஆகவும், 21.12.2019 ஆம் தேதியிட்ட மாவட்ட குற்றப் பிரிவு, நாகர்கோவில் முதல் தகவல் அறிக்கையின் குற்ற எண். 40/2019 சான்றிட்ட நகல் வா.சா.ஆ. 10 ஆகவும், 09.01.2020 ஆம் தேதயிட்ட Crl.O.P. (MD) No. 124/2020 தீர்ப்பாணை பதிவிறக்கப்பட்ட நகல் வா.சா.ஆ. 11 ஆகவும், 17.03.2020 ஆம் தேதியிட்ட வாதி தாக்கல் செய்த புகார் மனுவின் ஒப்புகை நகல் வா.சா.ஆ. 12 ஆவும், 07.07.2021 ஆம் தேதியிட்ட மாவட்ட குற்ற பிரிவு, நாகர்கோவில் வாதிக்கு அனுப்பிய அழைப்பாணை அசல் வா.சா.ஆ. 13 ஆகவும், 23.09.2021 ஆம் தேதியிட்ட மாவட்ட குற்ற பிரிவு, நாகர்கோவில் வாதிக்கு அனுப்பிய அழைப்பாணை அசல் வா.சா.ஆ. 14 ஆகவும், 03.11.2021 ஆம் தேதியிட் காவல் ஆய்வாளர், மாவட்ட குற்ற பிரிவு, நாகர்கோவிலின் மாறுதல் அறிக்கை சான்றிட்ட நகல் வா.சா.ஆ. 15 ஆகவும், 13.12.2021 ஆம் தேதியிட்ட புலம் பெயர்வோர் பாதுகாப்பு அதிகாரிக்கு வாதி கொடுக்கப்பட்ட மனு நகல் வா.சா.ஆ. 16 ஆகவும், 14.12.2021 ஆம் தேதியிட்ட மாவட்ட காவல்

கண்காணிப்பாளர், நாகர்கோவிலுக்கு வாதி கொடுக்கப்பட்ட மனு அலுவலக நகல் வா.சா.ஆ. 17 ஆகவும், 31.12.2021 ஆம் தேதியிட்ட மாவட்ட காவல் கண்காணிப்பாளர், நாகர்கோவிலுக்கு வாதி கொடுக்கப்பட்ட மாறுதல் மனு நகல் வா.சா.ஆ. 18 ஆகவும் மற்றும் 07.01.2022 ஆம் தேதியிட்ட மாவட்ட காவல் கண்காணிப்பாளர், நாகர்கோவில் மற்றும் மாவட்ட குற்றப் பிரிவு, நாகர்கோவில் வாதிக்கு அனுப்பிய அழைப்பாணை சார்பு செய்யப்பட்ட நகல் வா.சா.ஆ. 19 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

பிரதிவாதிகள் தரப்பில் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை வேறொரு தேதியில் ஒத்தி வைக்கப்படுகிறது.